## இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)

## வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்

**17 ஏப்ரல் 2015 / 27 ஜமாதியுல் ஆகிர் 1436**

## சன்மார்க்கச் செயல்பாடுகளுக்குப் பின்னணியில் உள்ள தத்துவங்களை அறிதல்

الْحَمْدُ لله الَّذِي أَحَاطَ بِكُلِّ شَيْءٍ عِلْمًا وَقَضَى بِمَا يُرِيْدُ حِكْمَةً
وَ حُكْمًا، أَنْعَمَ بِالنِّعَمِ ابْتِلاَءً وَامْتِحَانًا، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه ذُوْ الْجَلاَلِ وَالإِكْرَامِ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا
مُحَمَّدًا عَبْدُه وَرَسُوْلُهُ أَفْضَلُ الأَنَامِ وَ مِصْبَاحُ الظَّلاَمِ، اَللَّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِه وَصَحْبِه وَسَلِّمْ تَسْلِيْمًا
كَثِيْرًا .أَمَّا بَعْدُ فَيَا أَيُّهَا النَّاسُ اتَّقُوْا اللَّهَ حَيْثُ مَا كُنْتُمْ، فَإِنَّ اللهَ
يَعْلَمُ سِرَّكُمْ وَ عَلاَنِيَتَكُمْ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ்வின் மீதான நமது உண்மையான ”தக்வா” (பக்தி) வை அதிகரித்துக் கொள்வோமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் கயிற்றைப் பிடித்துக் கொள்வோமாக! ஒருவர் மற்றவர் மீது அன்பு கொள்வோமாக! இறைநம்பிக்கையாளர்கள் மற்றும் ”ஹிக்மத்” எனப்படும்

நுட்பமான அறிவைப் பெற்றவர்களில் நின்றும் நம்மை அல்லாஹ் ஆக்குவானாக!

ஜமாஅத்தார்களே!

நமது பாசத்திற்குரிய இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை முழுவதுமாக ஆய்வு செய்து பார்த்தால் "ஹிக்மத்" எனப்படும் அறிவுடைமை, மதிநுட்பம் அவர்களின் வாழ்க்கையை விட்டும் பிரிக்க முடியாத ஒரு அம்சமாக இருந்துள்ளதைக் காணலாம். ரசூலுல்லாஹி(ஸல்) இஸ்லாத்தைச் செயல்படுத்திய போதும், இஸ்லாத்தை மற்றவர்களுக்குப் போதித்த போதும், உபதேசத்தின் மூலம் மற்றவர்களுக்கு இஸ்லாத்தைத் தழுவுமாறு அழைப்பு விடுத்த போதும் "ஹிக்மத்" (மதிநுட்பத்தைப்) பயன்படுத்தினார்கள்.

ஒருமுறை, ஒரு வாலிபர் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் வந்து: விபச்சாரம் செய்ய தனக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டார். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் அந்த வாலிபரைத் தனக்கு அருகாமையில் அமர்த்தி: உன்னுடைய தாயுடன் விபச்சாரம் புரியப்படுவதை நீர் விரும்புவீரா? எனக் கேட்டார்கள். "இல்லை. அல்லாஹ் என்னை உங்களுக்கு அர்ப்பணமாக்கட்டுமாக! அல்லாஹ்வின் மீது ஆணையாக நிச்சயம் அதனை நான் விரும்பமாட்டேன்" என அந்த வாலிபர் கூறினார். "அவ்வாறே, மற்றவர்களும் தமது தாயாருடன் அவ்வாறு நடை பெறுவதை விரும்பமாட்டார்கள்" என ரசூலுல்லாஹி(ஸல்) பதிலளித்தார்கள். பின்பு, "இந்த வெறுக்கத்தக்க செயல் உனது மகளார்கள், சிற்றன்னை, பெரியம்மா, தாய் அல்லது தகப்பனின் உடன் பிறந்தவர்களின் பெண் பிள்ளைகள் போன்றவர்களுடன் நடைபெறுவதை நீர் விரும்புவீரா? என ரசூலுல்லாஹி (ஸல்) கேட்டார்கள். "இல்லை. அல்லாஹ் என்னை உங்களுக்கு

அர்ப்பணமாக்கட்டுமாக! அல்லாஹ்வின் மீது ஆணையாக, எனது எந்தப் பெண் உறவினர்களுடனும் அவ்வாறு நடைபெறுவதை நிச்சயம் நான் விரும்ப மாட்டேன்" என அந்த வாலிபர் கூறினார். பின்பு, ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தனது கரத்தை அந்த வாலிபர் மீது வைத்து: "யா அல்லாஹ்! இவரது பாவங்களை மன்னிப்பாயாக, (தவறான சிந்தனைகளை விட்டும்) இவரது உள்ளத்தைப் பரிசுத்தமாக்குவாயாக! விபச்சாரம் புரிவதிலிருந்து இவரைப் பாதுகாப்பாயாக!" எனப் பிரார்த்தித்தார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அஹ்மத் பின் ஹன்பல் ரஹ்)

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள மரியாதைக்குரிய ஜமாஅத் தார்களே!

மேற்கண்ட சம்பவத்தில், விபச்சாரம் சம்பந்தமாக அந்த வாலிபருக்கு உபதேசம் செய்யும் போதும், அவருடன் விவாதிக்கும் போதும் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் எந்த அளவு திறந்த மனதுடன் காணப்பட் டுள்ளார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் அவரை விட்டும் தனது முகத்தைத் திருப்பிக் கொள்ளவில்லை; அவரை விரட்டி விடவில்லை; அவரைத் திட்டவில்லை; கடிந்து பேசவுமில்லை. மாறாக, அவருக்குக் கிருபையுடன் அறிவுரை வழங்கினார்கள். அந்த வாலிபரிடம்: இது போன்ற தவறான செயல்களினால் ஏற்படும் தீய விளைவுகளைப் பற்றியும், இது போன்ற செயல் அவரது உறவினர்களுடன் புரியப்பட்டால் அவருக்கு ஏற்படும் உணர்வுகளைப் பற்றியும் சிந்திக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் சுருக்கமான

விளக்கத்தையும், நினைவூட்டுதலையும் அந்த வாலிபரால் புரிந்து கொள்ளவும், கிரேஹித்துக் கொள்ளவும் முடிந்தது.

மேற்கண்ட வரலாற்றில் நாம் ஒரு முக்கியமான பாடம் பெற வேண்டும். அதுதான், ”மற்றவர்களுக்கு நாம் உபதேசம் செய்யும் போது, அந்த உபதேசத்தைச் சரியாகவும் சிந்திக்கத்தக்க வகையிலும் வழங்க வேண்டும்” என்பதாகும். நம்மிடம் காணப்படும் மதிநுட்பக் குறைபாட்டின் காரணமாக, நல்ல உபதேசத்தைச் செய்யத் தவறி விடக் கூடாது; அல்லது பிரச்சனையை இன்னும் மோசமாக்கி விடவோ கூடாது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் ”அந்-நஹ்ல்” எனும் அத்தியாயத்தின் 125-வது வசனத்தில் கூறுகின்றான்:

ٱدۡعُ إِلَىٰ سَبِيلِ رَبِّكَ بِٱلۡحِكۡمَةِ وَٱلۡمَوۡعِظَةِ ٱلۡحَسَنَةِۖ وَجَٰدِلۡهُم
بِٱلَّتِي هِيَ أَحۡسَنُۚ إِنَّ رَبَّكَ هُوَ أَعۡلَمُ بِمَن ضَلَّ عَن سَبِيلِهِۦۖ وَهُوَ
أَعۡلَمُ بِٱلۡمُهۡتَدِينَ ١٢٥

பொருள்: (நபியே!) விவேகத்துடனும், அழகிய அறிவுரைகள் மூலமாகவும் உம் இறைவனின் மார்க்கத்தின் பக்கம் அழைப்பீராக! மேலும், மிகச் சிறந்த முறையில் மக்களிடம் விவாதம் புரிவீராக! தன்னுடைய பாதையிலிருந்து வழி தவறியவர் யார் என்பதையும், நேர்வழியில் இருப்பவர்கள் யார் என்பதையும் உம் அதிபதி நன்கறிவான்.

இஸ்லாமியத் தூதைப் பரப்புவதற்கும், நன்மைகளைச் செய்ய மற்றவர்களை நுட்பமாக அழைப்பதற்கும் இவ்வாறு தான், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் நமக்குப் போதித்துள்ளார்கள். சமுதாயத்துக்குப் போதிப்பதில், நபித்தோழர்களாகிய ஸஹாபாக்கள் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் முன்மாதிரியை அப்படியே பின்பற்றி னார்கள். மக்களுக்குப் போதிப்பதில் நுட்பமாக, அறிவுப்பூர்வமாக நடந்து கொள்வது அவசியம் என ஸஹாபாக்களும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். செய்யிதினா இப்னு மஸ்வூத் (ரலி) நவின்ற கருத்து ஒன்றை இமாம் முஸ்லிம் (ரஹ்) பின்வருமாறு பதிவு செய்துள்ளார்கள்:

مَا أَنْتَ بِمُحَدِّثٍ قَوْمًا حَدِيثًا لا تَبْلُغُهُ عُقُولُهُمْ ؛ إِلا كَانَ لِبَعْضِهِمْ فِتْنَةٌ

பொருள்: எக்கருத்தை சமூகத்தின் ஒரு பிரிவாரால் புரிந்து கொள்ள முடியாதோ அக்கருத்தைப் பேசாமலிருப்பது நன்றாகும். காரணம், அவ்வாறு செய்தால் சிலரிடம் குழப்பம் ஏற்படுவதற்கு அது காரணாமாகி விடும்.

இதுதான், மதிநுட்பம் என்பதன் சாராம்சமாகும். செய்திகளும், கல்வியறிவுகளும் நன்மைகளை ஏற்படுத்துபவையாக இருக்க வேண்டுமே தவிர, தீமை, அவதூறுகள், அழிவு போன்றவற்றை ஏற்படுத்துபவையாக இருப்பது கூடாது.

உதாரணமாக, அல்லாஹ்வின் பக்கம் நாம் நெருக்கமாக இருப்பதற்கும், அல்லாஹ் இருக்கின்றான் என்பதில் நமது நம்பிக்கை உறுதியாக

அமைவதற்கும் "தவ்ஹீத்" எனும் ஏகத்துவக் கல்வியறிவை நாம் பயில்கிறோம். எனினும், நாம், இந்த நல்ல அணுகுமுறைக்கு முரணாக உள்ள ஒரு அறிஞரிடம் கல்வியைத் தேடினால், மற்றவர்களை விடத் தாமே சிறந்தவர்கள், மற்றவர்களின் நம்பிக்கையை விட நமது நம்பிக்கை தான் உறுதியானது என்பதை நிரூபிப்பதற்காக அக்கல்வியைப் பயன்படுத்தினால், அது மதிநுட்பத்துடன் கூடிய அறிவுடைமைச் செயலாக இருக்க முடியாது.

இதை விட மோசமான செயல் யாதெனில், சில ஆசிரியர்கள் "தவ்ஹீத்" (ஏகத்துவக் கொள்கை), "அகீதா" (கொள்கை கோட்பாடுகள்) போன்ற கல்விகளைத் தமது மாணவர்களுக்குப் போதிக்கின்றார்கள். ஆனால், மற்றவர்களை கா∴பிர் (இறை நம்பிக்கையற்றவர்கள்), "முஷ்ரிக்" (இறைவனுக்கு இணை வைப்பவர்கள்) என்று முத்திரை குத்துவதற்காகவே போதிக்கின்றார்கள். "தவ்ஹீத்" என்பதன் உண்மையானப் பொருள் "ஒன்றுபடுத்துதல்" என்பதாகும். எனவே, தவ்ஹீத் சம்பந்தமானக் கல்வி ஏக இறைவனாகிய அல்லாஹ்வை வணங்குவதில் நம்மை ஒன்றுபடுத்து வதாகவே இருக்க வேண்டும். ஒற்றுமையின்மையை ஏற்படுத்துவதாக இருக்கக் கூடாது. ஏதாவதொரு ஆசிரியர், இவ்வாறு, தவறாகப் போதிப்பவராக இருப்பதைக் கண்டால் உடனே அவரை விட்டும் விலகி விட வேண்டும்; நாம் சிறந்த நபர்களாக உருவாகுவதற்கு உதவியாக இருக்கும் மற்ற ஆசிரியர்களை, நண்பர்களை நாட வேண்டும்.

இறைத்தூதர்(ஸல்) அவர்களின் பின்வரும் உபதேசத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டும்:

"உங்களது உள்ளங்கள் ஒன்றுபட்டிருக்கும் காலமெல்லாம் திருக்குர்ஆனை ஓதுங்கள்; அதன் கருத்துக்களைக் கற்று ஆய்வு செய்யுங்கள். திருக்குர்ஆன்

சம்பந்தமாக உங்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு விட்டால் சிறிது காலம் அதனை ஓதுவதை, ஆய்வு செய்வதை நிறுத்தி விடுங்கள்"

(ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், முஸ்லிம் ரஹ், அஹ்மது பின் ஹன்பல் ரஹ மற்றும் பலர்)

ஜமாஅத்தார்களே!

இந்த குத்பாவின் ஆரம்பத்தில் உங்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் "ஹிக்மத்" சம்பந்தமான ஹதீதை ஆய்வு செய்து பார்த்தால், அந்த இளைஞர் விபச்சாரம் செய்வதை விரும்பி, அதற்காக ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களிடம் அனுமதி கேட்ட போது, ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள், விபச்சாரம் "ஹராம்" (தடுக்கப்பட்ட செயல்) என உடனே கூறிடவில்லை என்பதை அறியலாம். உண்மையில், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் தனது பதிலை மிகவும் சிறப்பாக அமைத்துக் கூறினார்கள். அதன் காரணமாக, பாவம் புரியும் தனது விருப்பத்தைக் கூட அந்த வாலிபர் மாற்றிக் கொண்டார்.

மற்றவர்களை நன்மையின் பால் அழைக்கும் போது, இது அனுமதிக்கப்பட்டது, இன்ன விஷயம் அனுமதிக்கப்படவில்லை எனச் சட்டங்களை மட்டும் சொல்லி தீர்ப்பளித்துக் கொண்டிருக்கக் கூடாது. இது நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு அறிவுடைமை ஆகும். உதாரணமாக, எகிப்து நாட்டு அறிஞராகிய "ஷேக் முஹம்மது கஸ்ஸாலி" அவர்களிடம் : "ஒருவர் தான் தொழ வேண்டிய ஐங்காலத் தொழுகைகளைத் தொழாமல் புறக்கணித்தால் அவர் காஃபிர் (இறை நிராகரிப்பாளர்) எனக் கருதப்படுகிறாரே உங்களது அபிப்பிராயம் என்ன?

என்று கேட்கப்பட்டது. அதற்கு அந்த அறிஞர் உடனே அப்பிரச்சனைக்கான சட்டத்தைக் கூறி தீர்ப்பளிக்க முயலவில்லை. காரணம், தொழுகையைப் புறக்கணிக்கும் ஒருவரை காஃபிர் என்று கூறலாமா? கூறக்கூடாதா? என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்துவேறுபாடு உள்ளது. கருத்துவேறுபாடுள்ள ஒரு விஷயத்தில் உடனே தீர்ப்பளிக்க அவர்கள் விரும்பவில்லை. கருத்துவேறுபாடு என்பது தொடர்ந்து இருந்து கொண்டிருக்கும்; அதற்கு முடிவு என்பதில்லை. எனவே, அதை விட அடிப்படையான கருத்தில் கவனம் செலுத்துவது அவசியம் எனும் வகையில் அவர்கள் பின்வருமாறு பதிலளித்தார்கள்: ”தொழுகையைப் புறக்கணிக்கும் ஒருவர் தொழுகைகளைத் தொழுவதில் விருப்பமுள்ளவராக இருப்பார் என எவ்வாறு நாம் உறுதி செய்வது?”

இக்காலையில், புகைப்பிடிப்பது சம்பந்தமாகவும், அது கூடுமா? கூடாதா? அதன் சட்டம் என்ன என்பது பற்றியும் இன்னும் எத்தனையோ நபர்கள் விவாதித்துக் கொண்டிருக்கின்றார்கள். அது சம்பந்தமாக தமது நண்பர்களுக்கு அறிவுரை கூறவும் விரும்புகிறார்கள். எனினும், அதன் சட்டத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டிருப்பதை விட, அச்சட்டத்தையும் தாண்டி நாம் சிந்திப்பது அவசியமாகும். புகைப்பிடிக்கும் பழக்கமுள்ள நமது நண்பர்கள் அதிலிருந்து விடுபடுவதற்காக நாம் என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ளலாம் என நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

பாசத்திற்குரிய ஜமாஅத்தார்களே!

மேற்கண்ட விஷயங்கள் தான் ”ஹிக்மத்” (மதி நுட்பம்) தின் பொருள்களாகும். அறிவுடைமை, நம்மை ஆழமான மற்றும் விசாலமான புரிந்துணர்வின் பால் அழைத்துச் செல்ல வேண்டும். அல்லாஹ்வின் நாட்டத்துடன் கூடிய அறிவுடைமை, நமது குடும்பத்தார்கள் மற்றும்

நண்பர்களின் உள்ளங்களைத் தொடுவதாகும். அவர்களை நன்மையான பாதையின் பால் அழைத்துச் செல்வதாகும். அல்லாஹ்வின் மார்க்கம் மற்றும் அவனது தூதரின் போதனைகளின் மீது ஆழமான அன்பை ஏற்படுத்துவதாகும்.

இறைத்தூதர்(ஸல்) அவர்களை ஆர்வத்துடன் பின்பற்றுவதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு உதவி அருள் புரிவானாக! கல்வியறிவும் மதிநுட்பமும் வழங்கப்பட்ட அடியார்களில் நின்றும் நம்மை ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.